**கித்துள் அபிவிருத்தி சபை - 2025**

----------------------------------------------------------------

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

கித்துள் அபிவிருத்தி சபையின் ("சபை") 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின், 1971 இன் 46 ஆம் இலக்க தென்னை அபிவிருத்திச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

சபையின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்து செயப்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும். முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் சபை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய

பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன், அந்த வெளிப்படுத்தல்கள் போதியளவினதாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயம் மாற்றியமைக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையினால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- சபை தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- சபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| திறைசேரிச் செயலாளரின் 1978 திசெம்பர் 10 திகதிய 842 இலக்கம் கொண்ட திறைசேரிச் சுற்றறிக்கை | 2025 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 1,202,977 இற்கான நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டு வந்திருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் பதிவேடு தயாரிக்கும் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | சுற்றிக்கை ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 147,953 இற்கான பற்றாக்குறையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 1,063,835 தொகையாக காணப்பட்டது. அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 915,882 இற்கான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு திறைசேரி மானியம் ரூபா 14,822,920 தொகையினால் அதிகரித்தல் பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமானங்கள் மற்றும் செலவு விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

| விடயம் | மீளாய்வாண்டு<br>ரூபா | முன்னைய ஆண்டு<br>ரூபா | முன்னைய ஆண்டுடன் மாற்றமடைதல்<br>ரூபா | மாற்றமடைந்த சதவீதம் |
|---|---|---|---|---|
| அரச மானியங்கள் | 26,933,211 | 12,110,291 | 14,822,920 | 122 |
| ஏனைய வருமானங்கள் | 94,272 | 313,055 | (218,783) | (70) |
| சம்பளம், வேதனம் மற்றும் ஊழியர் நலன்கள் | 11,407,572 | 6,733,502 | 4,674,070 | 69 |
| வழங்கல் மற்றும் பராமரிப்புச் சேவைச் செலவு | 3,837,021 | 2,280,573 | 1,556,449 | 68 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் போது அரச மானியம் ரூபா 26,933,211 தொகை அதாவது முன்னைய ஆண்டிற்கு நேரொத்த அரச மானியம் 122 சதவீதத்திருத்த போதிலும், ஆண்டிற்கு இலக்காகிய 07 செயற்திட்டங்களுக்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 20,000,000 தொகையில் ரூபா 7,940,000 தொகை எனப்படும் 40 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) முன்னைய ஆண்டிற்கு நேரொத்த மீளாய்வாண்டின் போது ஏனைய வருமானங்கள் ரூபா 218,783 இனால் அதாவது 70 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. செயற்திட்டங்களுக்காக வழங்கியிருந்த பணம் முன்னைய ஆண்டிற்கான நேரொத்த குறைவாக சேமிக்கப்படல் இந்த நிலைமைக்கு நேரடியாக தாக்கத்தை ஏற்படுத்தியிந்தது.

### 2.3 விகிதாசாரப் பகுப்பாய்வு

நியம நடைமுறைச் சொத்துக்கள் விகிதாசாரம் 2:1 ஆக காணப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் சபையின் நடைமுறை சொத்துக்கள் விகிதாசாரம் 0.002:1 ஆக காணப்பட்டதுடன், முன்னைய ஆண்டின் போது அந்தப் பெறுமதி 0.25:1 ஆக காணப்பட்டது. நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 323,965 இனால் குறைவடைதல் நடைமுறைச் சொத்துக்கள் விகிதாசாரம் பின்னடைவதற்கு காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2026 பெப்ரவரி 26 திகதி மாதிரிப் பரிசோதனை அறிக்கை | இவ்வாறான கருமங்கள் மேற்கொள்ளப்படுகின்ற முதற் | கித்துள் பாணி மற்றும் கருப்பட்டி தொடர்பாக |

| | | | |
|---|---|---|---|
| | கிடைத்திருந்த போதிலும், 2026 ஏப்ரல் 30 திகதி அளவிலும், சந்தை ஆய்வு மேற்கொண்டிருக்கவில்லை எனவும், கித்துள் பாணி மற்றும் கித்துள் கருப்பட்டிக்காக தற்போது தயாரிக்கப்பட்டுள்ள நியமத்திற்காக செல்லுபடியாகும் சட்ட நிலைமை வர்த்தமானி ஒன்றின் மூலம் செல்லுபடியாகும் தன்மைக்கு ஆக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், இதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவு ரூபா 3,008,659 தொகையொகும். | சந்தர்ப்பமாக காணப்படுவதனால் சந்தை ஆய்வலுவல்கள் மேற்கொள்வதற்கு தேவையான கருமங்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும், இந்த அறிக்கையை அடிப்படையாக கொண்டு எதிர் காலத்தில் மேலும் பல கூட்டங்கள் நடாத்தி தற்போது காணப்படும் சந்தை நிலைமையை ஆய்வு செய்து கட்டளைகள் பணியகத்தின் மற்றும் நுகர்வோர் சேவை அதிகாரசபையின் உதவியுடன் விஷேட சந்தை தளம்பலை தவிர்ப்பதற்காக வர்த்தமானியொன்று வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நியமங்களை வலியுறுத்துவதற்கான வர்த்தமான அறிவித்தல் வெளியிடுவதற்கும், தாமதம் அடைந்துள்ள சந்தை ஆய்வினை பூர்த்தி செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 நிதியத்தின் குறைபயன்பாடு**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாதிரி பயிர்ச் செய்கைக்காக பொருத்தமான காணியொன்று இனங்கண்டு அதனை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் கீழ் ஒரு கித்துள் நாட்டுமேடையொன்று மற்றும் மாதிரிப் பயிர்ச் செய்கையொன்றின் அபிவிருத்திக்கும் 25,000 கித்துள் கன்றுகள் நடுவதற்காக ரூபா 800,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அவற்றில் ரூபா 100,000 தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. | இலங்கை அரச பெருந்தோட்ட கம்பனியுடன் இணைந்து 05 ஹெக்டயர்களில் கித்துள் கன்றுகள் நடப்பட்டுள்ளது என. | எதிர்பார்த்த செயற்திட்டத்தை ஆக்கபூர்வமாக செயற்படுத்த வேண்டும். |
| (ஆ) | கித்துள் சார்ந்த தொழில் முயலுனர் நிலைமையை அபிவிருத்தி செய்வதற்காக செயற்திட்டத்தின் கீழ் உபகரண உதவி வழங்குதல் மற்றும் உற்பத்தி வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் கூட்டிணைவிற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 2,500,000 தொகை ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இங்கு கித்துள் பூ வெட்டும் தொழிலாளர்களுக்கு கித்துள் பூ வெட்டும் கத்தியொன்று வழங்குவதற்கு திட்டமிடப்பட்டதுடன், பொருத்தமான கத்தியொன்று சந்தையில் கொள்வனவு செய்ய முடியாமல் போனது என. | எதிர்பார்த்த செயற்திட்டத்தை ஆக்கபூர்வமாக செயற்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சந்தை மேம்பாட்டின் ஊடாக சந்தை சந்தர்ப்பங்களை விரிவாக்கல் செயற்திட்டங்களின் கீழ் மூலோபாய இரண்டு இடங்களில் விற்பனை நிலையங்கள் நிறுவுதல் மற்றும் கித்துள் சார்ந்த சமையல் கலை கண்காட்சியொன்று நடாத்துவதற்காக ரூபா 1,870,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அவற்றில் ரூபா 470,000 தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. | தேசிய கலை மன்றத்தினால் சீகிரிய பிரதேசத்தில் அமைந்துள்ள கலை மற்றும் பண்பாட்டு கிராமத்தில் இந்த சபைக்கு வர்த்தகக் குடிலொன்று வழங்குவதற்காக அங்கீகாரம் கிடைத்துள்ளது என. | எதிர்பார்த்த செயற்திட்டத்தை ஆக்கபூர்வமாக செயற்படுத்த வேண்டும். |

**3.3 பெறுகை முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 2024 ஆண்டின் பெறுகை வழிகாட்டலின் 4.1.3 இன் பிரகாரம் வேலைகள், பண்டங்கள் மற்றும் ஏனைய சேவைகள் என வகைப்படுத்தப்பட்ட விரிவான வருடாந்த பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2025 ஆண்டிற்காக சபையினால் நேரொத்த பெறுகைத் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை. | 2025 ஆண்டிற்காக வரைவு பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும், 2026 – 2028 ஆண்டுகளுக்கான விரிவான பெறுகைத் திட்டம், 2026 ஆண்டிற்கான வருடாந்த பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என. | வழிகாட்டலின் படி பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2024 பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.17 இன் பிரகாரம் பண்டங்கள் மற்றும் வேலை ஒப்பந்த வேலைகளுக்காக மாத்திரம் முற்பணக் கொடுப்பனவு மேற்கொள்ள முடியும் எனவும், உசாத்துனை அல்லாத சேவைகளுக்காக செயற்திட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னர் முன்பணம் செலுத்துவதற்கான ஏற்பாடுகள் அடங்கியிருக்கவில்லை. எனினும், தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுக்கள் மற்றும் திணைக்கள பெறுகைக்குழுவின் பரிந்துரையின் மீது ஆய்வுச் செயற்திட்டங்கள் ஆரம்பிப்பதற்காக தேவையான அடிப்படை நிதி ஏற்பாடுகள் என | பதில் அனுப்பப்பட்டிருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டல் கோவைக்கு நேரொத்ததாக இருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| சமர்ப்பிக்கப்பட்ட விலையில் 66 சதவீதத் தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. | | |

**3.4 ஏனைய அமைப்புக்களுக்கு விடுவிக்கப்பட்ட வளங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| யடியந்தோட்டை பிரதேச செயலகத்திற்கு சொந்தமான காணியொன்றில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடமொன்றில் 2022 ஆண்டு முதல் கித்துள் உற்பத்தி விற்பனை நிலையமொன்று நடாத்தப்பட்டு வந்ததுடன், சபையினால் 2023 மற்றும் 2024 ஆண்டுகளில் ரூபா 1,879,737 தொகை செலவிடப்பட்டு அந்தக் கட்டிடத்தின் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், கட்டிடம் எதுவித பொருளாதார விடயங்களுக்காகவும் பயன்படுத்தப்படால் விளைவற்றுக் காணப்பட்டது. | அமைச்சின் உத்தியோகத்தர்கள், கித்துள் சபையின் உத்தியோகத்தர்கள் மற்றும் யடியந்தோட்டை பிரதேச செயலக உத்தியோகத்தர்களுடன் இணைந்து மிக விரைவில் களப் பரிசோதனையொன்று மேற்கொள்வதற்கு தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சொத்துக்கள் ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தப்பட வேண்டும். |

**3.5 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கித்துள் அபிவிருத்தி சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்காக ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையொன்று முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தினால் 2021 திசெம்பர் 20 திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், பதவியணியில் 02 உதவி / பிரதி முகாமையாளர்கள் பதவிகள், 17 ஆய்வு மற்றும் அபிவிருத்தி உதவியாளர் பதவிகள் மற்றும் 04 முகாமைத்துவ உதவியாளர் பதவிகள் வெற்றிடமாக காணப்பட்ட போதிலும், பொது முகாமையாளர் பதவி, உள்ளகக் கணக்காய்வாளர் பதவி, நிருவாக பதவி மற்றும் கணக்கு உத்தியோகத்தர் | வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான கோரிக்கைகள் வரிசையமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது என. | சபையின் கருமங்களை உரிய முறையில் நிறைவேற்றிக்கொள்வதற்கு தேவையான பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு தாமதமின்றி மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| பதவிகளின் கடமைகள் பதில் கடமை உத்தியோகத்தர்களினால் நிறைவேற்றப்பட்டு வருகின்றது. | | |

**3.6 வாகன முறைமை முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற பெருந்தோட்டத் தொழில் அமைச்சிலிருந்து கிடைத்திருந்த 02 வாகனங்களை பெறுமதி மதிப்பீடு செய்து சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இதுவரை வாகனங்களை உரிதாக்கியிருக்கவில்லை என. | சபையினால் பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களை உரித்தாக்கிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 வருடாந்த அறிக்கை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2024 இன் 44 ஆம் இலக்க அரச நிதி முகாமைத்துவச் சட்டத்தின் உப பிரிவு 47(4) பிரகாரம் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை நிதியாண்டு முடிவடைந்து 180 நாட்கள் முடிவடைய முன்னர் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2023 வருடாந்த அறிக்கை இதுவரை சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 வருடாந்த அறிக்கை அமைச்சினால் 2026/03/14 திகதி பராளுமன்றத்தில் சமர்ப்பிப்பட்டுள்ளது என. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

**4.2 குறிக்கோள்கள் மற்றும் கூட்டிணைந்த திட்டம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திறைசேரிச் செயலாளரின் 2021 நவம்பர் 16 திகதிய இலக்கம் பீஈடீ/01/2021 கொண்ட அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கைக்கு இணங்க நிறுவகம்சார் நல்லாளுகை தொடர்பாக வழிகாட்டலின் இணைப்பு 01 இன் பந்தி 01 மற்றும் வழிகாட்டல் கைநூலின் பிரிவு 2.3 பிரகாரம் சபையினால் 2025 ஆண்டிற்காக | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய படிவத்திற்கு இணங்க கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கூட்டிணைந்த திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை. எனினும், கூட்டிணைந்த திட்டம் தயாரிப்பதற்காக 2024 மற்றும் 2025 ஆண்டுகளின் போது ரூபா 1,146,905 தொகை செலவிடப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | கித்துள் அபிவிருத்தி சபை நிறுவுதல் தொடர்பான 2021 மார்ச் 17 திகதிய அதிவிஷேட வர்த்தமானியின் படி சபையினால் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்த்திருந்த கித்துள் பயிர்ச்செய்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற காணிகளில் கால்நடை வளர்ப்பில் ஈடுபடுதலை மேம்படுத்துதல், கித்துள் பயிர்ச் செய்கைகளில் தெங்கு மற்றும் ஏனைய பயிர்களை பயிர்ச் செய்தல் தொடர்பாக பிரசித்தப்படுத்தல் மற்றும் மேம்படுத்துல் ஆகிய கருமங்களை நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக பணிப்பாளர் சபையுடன் கலந்துரையாடி தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என. | கித்துள் அபிவிருத்தி சபை நிறுவியதன் அடிப்படை குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு தேவையான கருமங்களை செயற்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4.3 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் குறிக்கோள்சார் தொழிற்பாடுகளின் முன்னேற்றம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 திகதிய பீஈடி/01/2021 இலக்கம் கொண்ட அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கைக்கு இணங்க நிறுவனம் சார் நல்லாளுகை தொடர்பான வழிகாட்டலின் இணைப்பு 01 இன் பந்தி 02 மற்றும் வழிகாட்டல் கைநூலின் பிரிவு 2.3 இன் பிரகாரம் சபையினால் 2025 ஆண்டிற்கான கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் நிறுவனத்தின் குறிக்கோள்கள், மூலோபாயங்கள், தொழில்பாடுகள், மாதாந்த இலக்குகள் மற்றும் பொறுப்பான | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை அறிவுரைகளுக்கு இணங்க செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| உத்தியோகத்தர்களை உள்ளடக்கி சரியான படிவத்திற்கு இணங்க காணப்படவில்லை. | | |

## 4.4 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் படி 2015 – 2030 காலப் பகுதியில் நெருங்க வேண்டிய நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை இனங்கண்டு அவற்றை செயற்படுத்துவத்றகாக 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்திச் சட்டத்தின் படி ஒவ்வொரு அரச நிறுவனத்தினதும் கடப்பாடாக காணப்படுகின்றது. அதன்படி, சபைக்குப் பொருத்தமான நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள், இலக்குகள் மற்றும் சுட்டிகளை தெளிவாக இனங்கண்டு செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்திச் சட்டத்தின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் இனங்காணப்பட வேண்டும். |